6th March 1964] *[திரு. பி. ஜெயராஜ்]*

திட்டம் ஆகிய திட்டங்களை அமைத்திருப்பது பாராட்டுதலுக்குரியது. நாட்டு மக்கள் நல் வாழ்வு வாழ்வதற்கு, நாட்டு மக்களுக்கு நல்ல சேவை செய்வதற்கு இந்த பட்ஜெட்டில் நல்ல பல திட்டங்கள் இருக்கின்றன.

கடைநிலை ஊழியர்களுக்கு போதிய அளவு சலுகை கொடுக்கப்படவில்லை, அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்படவில்லை என்ற கூக்குரல் எழுப்பப்படுகிறது. அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கவேண்டியது மிகவும் அவசியமாக இருந்தாலும் கூட, நமது நிதிநிலை அதற்கு இடம் கொடுக்கவேண்டும். இதை அரசாங்கம் நன்றாக கவனித்து, மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு எந்த அளவுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை மனதில் கொண்டு, எந்த அளவுக்கு மாநில சர்க்காரில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க முடியுமோ, அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு அரசாங்கம் வசதி செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டங்களின் மூலம் நாட்டில் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொடுக்கும் அளவுக்கும், ஏழை பணக்காரர்கள் என்ற வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்கக்கூடிய அளவுக்கும் இந்த பட்ஜெட்டை கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்ததற்கு அவர்களைப் பாராட்டி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

IV. ANNOUNCEMENT

Conviction of a Member

MR. DEPUTY SPEAKER: I have to inform the House that the following communication regarding the conviction of an hon. Member of the House has been received from the District Magistrate, Chingleput.

'Dear Mr. Speaker,

I have the honour to inform you that Sri S. J. Ramaswamy, Member of the Madras Legislative Assembly (Arkonam Constituency) was tried at the District Magistrate's Court, before me on a charge of being a member of an unlawful assembly and obstructing public servants from doing their lawful duties on 1st February 1964 at Kancheepuram, after a trial lasting for 12 days. I found him guilty of the above offences and sentenced him to imprisonment for a period of four months'.

III. GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1964–65—*Cont.*

* **திரு. ர. சம்பங்கி**: மதிப்பிற்குரிய சட்டமன்ற துணைத்தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு விளைச்சல் எந்த அளவுக்கு